செ.வெ.எண்: 82 நாள்: 31.01.2020

**கொரோனா வைரஸ் குறித்து பள்ளி மாணவ, மாணவிகளிடையே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி கலந்துரையாடினார்.**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் 2,050 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்ற தொகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (31.01.2020) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் பள்ளிக்கல்விதுறையை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் சார்பில் 14 வகையான கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், கொடும்பாளூர், செவல்பட்டி, கவரப்பட்டி, விராலிமலை ஆகிய பகுதிகளில் அரசு பள்ளிகளில் பயிலும் 689 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய நலத்திட்ட உதவிகளால் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் சிறந்த முறையில் கல்வி கற்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

மனிதர்களுக்கு இரண்டு வகையான நோய்கள் ஏற்படுகின்றது. ஒன்று தொற்று நோய் மற்றொன்று தொற்றா நோயாகும். இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் போன்ற தொற்றா நோய்களை கட்டுப்படுத்த முறையான உணவு பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதுடன், உடல் சுறுசுறுப்பாக இயங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் வகையில் தீவிர நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் வகையில் ஒவ்வொருவரும் தினமும் 15 முறை கைகளை சோப்பு போட்டு நன்கு கழுவ வேண்டும். வெளியே பொது இடங்களுக்கு செல்லும் போதும், பொது இடங்களுக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வரும் பொழுதும் கைகளை நன்றாக சோப்பு போட்டு கழுவ வேண்டும். இருமல், தும்மல் வரும் பொழுது கைக்குட்டையால் முகத்தை மூடிக் கொண்டு இரும வேண்டும்.

இதுபோன்ற தன் சுத்தங்களை தவறாமல் கடைபிடிப்பதன் மூலம் கொரோனா வைரஸ் பரவுவதை முற்றிலுமாக தடுக்க முடியும். பள்ளி மாணவ, மாணவியர்களும் கொரோனா வைரஸ் குறித்து தங்களது இல்லங்கள் மற்றும் பொதுமக்களிடம் உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தி எவ்வித நோய் தொற்றும் இல்லாமல் தடுக்க வேண்டும்.

எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் மாணவ, மாணவிகள் இதனை உரிய முறையில் பயன்படுத்தி கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செவல்பட்டி, கவரப்பட்டி, விராலிமலை, மலைக்குடிப்பட்டி, இலுப்பூர், இராப்பூசல், முக்கணாம்மலைப்பட்டி, பரம்பூர், வயலோகம், கீழக்குறிச்சி, அன்னவாசல், மண்ணவேளாம்பட்டி மற்றும் மருதாந்தலை ஆகிய அரசு பள்ளிகளில் பயிலும் 1,361 மாணவ, மாணவிகள் என ஆக 2,050 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் விஜயலெட்சுமி, மாவட்ட கல்வி அலுவலர் இராஜேந்திரன், ஒன்றியக் குழுத்தலைவர் வி.ராமசாமி, மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தலைவர் திரு.எஸ்.பழனியாண்டி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சிவசாமி, ஒன்றியக்குழு உறுப்பினர் மணிகண்டன், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**